padippakam



# ஆறுமுகநாவலர் பற்றிய இரு பார்

## பகுதி II

6

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

1848-ல் ஆறுமுகநாவலர் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்த போது - அவர் நிறைய எதிர்ப்புக்களையும் போட்டிகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. கிறிஸ்தவ மதப்பரப்பலையும், அதன்மூலம் காலணிய அரச நலன்களையும் பேணுவதையும் நோக்கமாகக் கொண்ட கிறிஸ்தவ மிசனறிமார்களின் எதிர்ப்பை முதலில் அவர் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்களிடமிருந்த பணபலம், மற்றும் அதிகாரபலத்தை சமாளிப்பது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே, காலணிய அரசுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் நன்றி விசுவாசமாக நடந்துகொள்வதன் மூலம் நிறையவே வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து வைத்திருந்த யாழ்ப்பாண நிலப்பிரபுத்துவ வர்க்கம் ஆறுமுகநாவலரின் முயற்சிக்கு பெரியளவுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆங்கிலம் படித்தால் உத்தியோகம் கிடைக்கும் தமிழ் படித்தால் என்ன கிடைக்கும்? என்ற மனப்பான்மையே அவர்களிடமிருந்தது.

ஆனாலும், பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்துத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்த ஒரு சில இந்து நிலப்பிரபுக்களின் ஆதரவு அவர்களுக்குக் கிடைத்தது. தமிழ் மொழி மீது பற்றுக் கொண்ட யாழ்ப்பாணத்து புலவர்கள், பண்டிதர்கள் பலரும் அவருடன் சேர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள நகரங்களில் சைவப்பிரகாச வித்தியசாலைகளை நிறுவுவதுடன், கிராமங்கள் தோறும் திண்ணைப்பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவி பிரசாரத் துண்டுப் பிரசுரங்கள், பாடப் புத்தகங்கள் என்பன ஆறுமுக நாவலரால் அச்சடித்து விநியோகிக்கப்பட்டன. சைவ வினாவிடை, இலக்கணச் சுருக்கம் முதலான பல நூல்கள் மிக எளிய உரைநடையில் எழுதி வெளியிடப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் தமிழ் புலவர்கள் மற்றும் பண்டிதர்களிடையே வழக்கிலிருந்த மணிப்பிரவாளநடை (வடமொழியையும், தமிழையும் கலந்து எழுதுவது) மற்றும் பண்டிதத்தமிழ் நடைக்குப் பதிலான மிகவும் இலருவாக அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய உரை நடை ஒன்றை உருவாக்கி தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை ஆறுமுகநாவலரையே சாரும்.

ஆறுமுகநாவலர் சிறந்த உரை நடை ஆசிரியர் மட்டுமல்லாமல், சிறந்த பேச்சாளராகவும் விவாதத் திறமையுள்ளவராகவும் விளங்கினார். அவர் யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களில் சைவ சமயத்தின் மேன்மை பற்றி இலகுவான தமிழில் வாரம் தோறும் உரை நிகழ்த்தி வந்தார். அவரது உரையைக் கேட்பதற்கென்றே பல நூற்றுக் கணக்கான மக்கள் கோவிலுக்குச் சென்றுவர ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ மிசனறிமாருடன் அவர் நடாத்திய விவாதங்கள் சைவ சமயத்தின் மேன்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டும் விதத்தில் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தைப் பற்றி தமிழ் நாட்டிலிருந்த பண்டிதர்களும், புலவர்களும் இந்து நிலப்பிரபுக்களும் கொண்டிருந்த தவறான கருத்துக்களை தனது விவாதத் திறமையால் அகற்றிய பெருமையும் ஆறுமுகநாவலருக்கு உண்டு. அதாவது யாழ்ப்பாணத்தவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு எதுவும் செய்வதில்லை. அங்கு தமிழ் நூல்கள் எதுவும் வெளிவருவதில்லை. தாங்கள் மட்டும் தான் தமிழை வளர்ப்பதற்கு பாடுபட்டுவருகின்றோம் என்று அவர்கள் கொண்டிருந்த தற்பெருமையை ஆறுமுகநாவலர் தனது ஆணித்தரமான விவாதங்கள் மூலம் நிர்மூலம் செய்தது மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலும் தனது பணியைத் தொடர்வதற்கு சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையையும், மடாலயம் ஒன்றையும் சென்னையில் அச்சகமொன்றையும் உருவாக்கியிருந்தார்.

தமிழ் நாட்டில் ஆறுமுகநாவலருக்கும் இராமலிங்க வள்ளலாருக்குமிடையில் நிகழ்ந்த 'அருட்பா மருட்பா' விவாதம் அக்காலத்தில் மிகவும் பரபரப்பும் பிரபல்யமும் பெற்றிருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆறுமுக்நாவலருடைய பணியை மதிப்பீடு செய்யும் போது, காலணிய அடக்குமுறைக்கு எதிராக தமிழ் தேசிய உணர்வுக்கு வித்திட்டவர் என்று ஒரு சாராரும் இல்லை அவர் ஒரு மதவாதி மட்டுமே என்று இன்னொருசாராரும் சொல்லும் இரண்டு கருத்துப் போக்குகள் உள்ளன.

பரமபதி துணை

### இலக்கணச் சுருக்கம்



யாழ்ப்பாணம் நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

செய்தது

வெளியீடு:

தவத்திரு ஆறுமுக நாவலர்
சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை
24, மாலைக்கட்டித் தெரு, சிதம்பரம் - 608 001

ஆறுமுகநாவலரை ஒரு தேசியவாதி என்று காட்ட முற்படுபவர்கள், தாய் மொழிக் கல்விக்கான அடித்தளத்தை இட்டதன் மூலமும், தமிழ் மொழிக்கு புதிய உரை நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்து வைத்து அதன் வளர்ச்சியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியதன் மூலமும் காலனிய மதமான கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து சுதேசிய மதமான சைவ சமயத்தை நிலை நிறுத்தவும், வளர்த்தெடுக்கவும் முயன்றதன்மூலம் இயல்பாகவே அவர் மக்கள் மத்தியில் தமிழ் தேசிய உணர்வு தோன்றுவதற்கு வழிவகுத்திருக்கிறார் என்பது போன்ற பல காரணங்களை முன் வைக்கின்றனர்.

அதை மறுப்பவர்கள் "வித்தியாதானத்துக்கு சமமானது ஒன்றுமில்லை. வித்தியாதானமே எல்லாத்தானத்திலும் சிறந்தது" என்று கூறி தமிழ் மொழி கல்விக்கு வித்திட்ட ஆறுமுக நாவலர் சாதி வெறிக்கு ஆட்பட்டு தமிழ் மக்களில் ஒரு சாராருக்கு கல்வி உரிமை மற்றும் சமூக உரிமைகளை மறுத்திருக்கிறார். அவரது பாடசாலைகளில் சாதி குறைந்த பிள்ளைகள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. இவர் எழுதிய சைவ வினா விடைகளில் சாதிவேறுபாடுகள் அப்பட்டமாகக் காண்பிக்கப்பட்டன. சமயக் கல்வி என்ற பெயரில் சாதி கற்பிக்கப்பட்டது. ஒரு தேசியவாதிக்குரிய அடையாளம் ஒரு தேசிய இனம் என்ற வகையில் எல்லா மக்களையும் ஒன்று பட வைப்பது ஆனால் ஆறுமுகநாவலர் சாதியின் பெயரால் தமிழ் மக்களை பிரித்துவைத்தார். அவரை ஒரு தேசியவாதி தேசியத் தலைவர் என்று சொல்லமுடியாது என்கிறார்கள்.

உண்மையில் ஆறுமுகநாவலரது காலத்தில் சிறீலங்காவின் தென்பகுதியில் உருவான பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், கண்டியச் சிங்களவர்கள் என்றும், கரையோரச் சிங்களவர்கள் என்றும் பிரிந்திருந்த சிங்கள மக்களை 'பௌத்த சிங்களவர்கள்' என்ற வகையில் ஒன்று சேருமாறு அறை கூவல் விடுத்தது. சிங்கத்தின் இனம் துட்டகைமுனுவின் வாரிசுகள் என்று அநகாரிக தர்மபாலா சிங்கள மக்களை அறைகூவி அழைத்த போது அவர் கண்டி கரையோரம் என்று பேதம் பிரித்து அழைக்கவில்லை. மது ஒழிப்பு மாட்டிறைச்சி உண்பதற்கு எதிர்ப்பு என்று அவர் எதிர்ப்பியக்கம் நடத்தியபோது ஒட்டு மொத்தமாக பௌத்த சிங்களவர்கள் அதை புறக்கணிக்க வேண்டும் என்றுதான் கோரிக்கைவிடுத்தார்.

ஆனால் யாழ்ப்பாண இந்து நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைச் சேர்ந்த ஆறுமுகநாவலர் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்த போது 'ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுக்கான இயக்கமாக அதை ஆரம்பிக்காமல் உயர் சாதி இந்துக்களுக்கான இயக்கமாக அதைக் குறுக்கிக் கொண்டார். தமிழ் மக்களின் பூர்வீகமதமும் 3500 வருடங்களுக்கு மேலாகவே இலங்கை முழுவதிலும் பரவியிருந்த மதமுமான 'சைவ' மதத்தைத் தூக்கிப் பிடிப்பதற்குப் பதில் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரால் பார்ப்பணிய மயப்படுத்தப்பட்டு பின்னால் வந்த அவரது சிஷ்ய பரம்பரையினரால் நிறுவன மயப்படுத்தப்பட்ட சனாதன இந்த மதத்தையே தூக்கிப்பிடித்தார்.

யாழ்ப்பாணத்து சைவக் கோவில்களின் வழிபாட்டுக்குரிய ஆகம முறைகளை வகுத்த போது அவர் சாதியை சட்டமாக்கினார். யாழ்ப்பாண சமூக அமைப்பில் சாதி ஏற்கனவே இருந்த போதும், போர்த்துக்கேயர் காலத்திலிருந்து ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்ககாலம் வரை ஏற்பட்ட நெருக்கடிகளால் அது நொய்ந்து போயிருந்தது. அந்த நொய்வை அகற்றி அதற்குப் புத்துயிரளித்தவர் ஆறுமுகநாவலர். அவர் வெளிப்படையாகவே தனது பேச்சுக்கள் எழுத்துக்கள் மூலம் சைவத்தின் மேன்மையோடு சாதியையும் சேர்த்தே பேசினார், எழுதி [illegible] வைக்கு உயர்சாதி இந்துக்கள் மட்டுமே தமிழர்களாகக் தெரிந்தார்கள். ஏறக்குறைய யாழ்ப்பாண சனத் தொகையில் 35 முதல் 40 வீத மக்களையே அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

உண்மையில் ஆங்கிலேயர்கள் எதிர் பார்த்தது இது தான். ஆங்கிலேயர்களைத் தவிர்ந்த மற்ற ஐரோப்பிய காலணி அரசுகள், தங்களது காலணி நாடுகளிலுள்ள சுதேசிய நிலப்பிரபுத்துவத்தை வேரோடு பிடுங்கி அழித்து வந்திருக்கின்றன. ஆனால் பிரித்தானிய அரசு, தனது காலணிநாடுகளில் சுதேசிய நிலப்பிரபுத்துவ அமைப்பை சலுகைகளும், பதவியும் கொடுத்து விலைக்கு வாங்கி அது தனக்குள்ளே கொண்டிருக்கக் கூடிய அதே பழைய முரண்பாடுகளுடன் தொடர்ந்து இயங்குவதற்கு ஆங்கிலேயர்கள் அனுமதித்து வந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அங்குள்ள இந்து நிலப்பிரபுக்களுடனே சமரசம் செய்துகொள்வதன் மூலம் அவர்களை மத, மொழி விடையங்களில் விட்டுப் பிடிப்பதன்மூலம் யாழ்ப்பாண மக்களை சாதி ரீதியாக பிளவுபடுத்தி வைத்து தமிழ் தேசிய இனம் என்ற வகையில் ஒன்று திரண்டு தங்களுக்கெதிரான கிளர்ந்தெழுந்துவிடாதவாறு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். ஆறுமுகநாவலரது சைவ மறுமலர்ச்சி இயக்கமும் அதையொட்டிய அவரது சாதிய நிலைப்பாடுகளும் ஆங்கிலேயர்களது இந்த எண்ணத்துக்கு செயல் வடிவம் கொடுக்கும் விதத்திலேயே அமைந்திருந்தன.

- நக்கீரன்

படிப்பகம்